**விசேட அறிவித்தல்**
**இத்தாலியில் கொரோனா வைரஸ் தொற்று**

கொரோனா வைரஸ் தொற்று இத்தாலியில் வேகமாக பரவி வருவதனை தாங்கள் அறிவீர்கள். இத்தாலிய அரசாங்கமானது இத்தாலியின் அனைத்து பிரதேசங்களையும் தனிமைபடுத்தலுக்கு உட்படுத்தியுள்ளது. இச்சூழ்நிலையில், பின்வருவன தொடர்பாக விசேட கவனம் செலுத்தி தங்களது பாதுகாப்பினை உறுதிபடுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இத்தாலியின் அனைத்து பிரதேசங்களும் ஆபத்துமிகுந்த பகுதிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இத்தாலியில் வசிக்கின்ற அனைவரும் பொது இடங்களில் ஒன்று சேர்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இது ஏப்ரல் மாதம் 03ம் திகதி வரை அமுலில் இருக்ககும்.

இத்தாலியின், மண்டலங்களுக்கும் நகரங்களுக்கும் இடையில் பயணம் செய்வது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது, மேலும் மக்கள் தங்கள் பிரதேசத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவதில்லை.

அவசர விடயத்திற்காக நீங்கள் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டுமானால், இங்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட இத்தாலிய பாதுகாப்புப் பிரிவினரிடம் சமர்ப்பித்து அனுமதி பெறுதல் வேண்டும்.

உடல் வெப்பநிலை *37.5* பாகை செல்சியசை விட அதிகமாக இருந்தால், நீங்கள் வீட்டிலேயே தங்கி மருத்துவ ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும் மற்றும் இத்தாலிய அரசாங்கத்தால் வழங்கப்படும் சுகாதார அறிவுறுத்தல்களை தவறாது கவனத்தில் கொள்ளுங்கள்.

நீங்கள் அவசர தேவைகளுக்காக இத்தாலியை விட்டு வெளியே செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டால் உரிய விண்ணப்ப படிவத்தை (இரண்டு பிரதிகள்) பூர்த்தி செய்து இத்தாலிய அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டும், சம்பந்தப்பட்ட விமான மற்றும் விமான நிலைய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, ஏற்பாடுகளை மேற்கொள்ளவும்.

இத்தாலியில் இருந்து இலங்கைக்கு வரும் அனைத்து பயணிகளும் *14* நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். உங்கள் பொருட்கள் மற்றும் பொதிகள் அனைத்தும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்கு அனுப்பப்படும் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையின் முடிவில் பொருட்கள் மற்றும் பொதிகள் உரிமையாளர்களுக்கு திருப்பி ஒப்படைக்கப்படும். நீங்கள் தனிமைப்படுத்தப்பட்ட மையங்களுக்குச் செல்வதற்கு முன்பு உங்கள் பணத்தை வங்கியில் வைப்பு செய்ய விமான நிலையத்தில் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தூதரகம் மற்றும் மிலான் துணைத் தூதரகம் என்பன தொடர்ந்து செயற்படுவதுடன், பின்வரும் உத்தியோகத்தர்களை தொடர்புகொள்வதன் மூலம் தங்களுக்கு தேவையான கொன்சுயுலர் தகவல்களைப் பெறலாம்.

**இலங்கை தூதரகம்**

| | | |
|---|---|---|
| செல்வி. பிரியா நாகராஜா | - மூன்றாவது செயலாளர் | - *(0039) 3 403 581 603* |
| திரு. புஸ்பராஜ், | - நிருவாக உத்தியோகத்தர் | - *(0039) 3 459 935 732* |
| திரு. மாதவ விக்ரம, | - கொன்சுயுலர் பிரிவு | - *(0039) 3 499 352 624* |
| செல்வி. நிமாலி ஜெயமஹா, | - கொன்சுயுலர் பிரிவு | - *(0039) 3 483 027 997* |
| திரு. சமிந்த தர்மரத்ன | - கொன்சுயுலர் பிரிவு | - *(0039) 3 483 028 427* |

**மிலான் துணை தூதரகம்**

| | | |
|---|---|---|
| திருமதி. சந்தமாலி திசாநாயக்க | - நிருவாக உத்தியோகத்தா | - *(0039) 3 888 016 268* |
| திருமதிசத்துரிகா ரோ'ானி, | - கொன்சுயுலர் பிரிவு | - *(0039) 3 887 249 016* |

**இலங்கை தூதரகம் - இத்தாலி**